# பாதுகாப்பான நீர் விநியோகம் மற்றும் பயன்பாடு குறித்த மதிப்பாய்வு : திருவல்லிக்கேணி மற்றும் ராயபேட்டை







## ரோஷ்னியை சார்ந்த சுய உதவி பெண்களால் மேற்கொள்ளப்பட்டது

**'நமது நகரம், நமது உரிமை'**

**June 2018**

ROSHNI
Signifies light

PRAJNYA

| எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சுருக்கம் | 3 - 4 |
| 2 | அறிமுகம் | 4 - 6 |
| 3 | ஆய்வுமுறை | 6 - 7 |
| 4 | பாதுகாப்பான நீர் விநியோகம் மற்றும் பயன்பாடு குறித்த மதிப்பாய்வின் மூலம் கண்டறிந்தவை | 8 - 15 |
| 5 | பரிந்துரைகள் | 15 - 16 |
| 6 | இணைப்பு I : சுகாதார மதிப்பாய்விற்கான படிவம் | 17 - 21 |

## சுருக்கம்

'நமது நகரம், நமது உரிமை' என்பது பெண்களுக்காக வடிமைக்கப்பட்ட குடியுரிமை விழிப்புணர்வுக்கான செயலாக்கம் ஆகும். இந்த திட்டமானது, கற்பித்தல் மற்றும் செயல்பாடு ஆகியவற்றை நோக்கமாகவும், பல கட்டங்களை கொண்டும் வடிமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த திட்டம், சென்னையை சார்ந்த பல்வேறு அமைப்புகளுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ரோஷ்னி என்ற அமைப்புடன் இணைந்து, மேற்கொண்ட இந்த திட்டத்தின் ஒரு அம்சமான "பாதுகாப்பான நீர் விநியோகம் மற்றும் பயன்பாடு" பற்றிய ஆய்விற்கான அறிக்கையே இது. பிரக்ஞா, ரோஷ்னியை சார்ந்த ஐந்து சுய உதவி குழு பெண்களை ஊக்குவித்து, சென்னையில் திருவல்லிக்கேணி மற்றும் இராயப்பேட்டை ஆகிய இடங்களில் இந்த ஆய்வினை மேற்கொண்டது.

அவர்கள் கீழ்கண்ட அளவுகோல்களை கொண்டு, இந்த ஆய்வினை மேற்கொண்டனர்:

தண்ணீர் விநியோகம்: நீர் விநியோகத்திற்கான கால நிர்ணயம்; வீட்டில் நீர் கிடைப்பதற்கான வாய்ப்பு; தண்ணீர் கிடைக்கும் தொலைவு.

குடி நீர்: மாநகராட்சி விநியோகிக்கும் குடி நீரின் தன்மை; குடி நீர் சுத்திகரிப்பு; குடி நீர் சுத்திகரிப்புக்கான வழிமுறைகள்; குடி நீர் கிட்டும் தன்மை .

இதர தேவைகளுக்கான நீரின் பயன்பாடு: தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான தண்ணீர் வசதி; கிணறு / போர்வெல் நீரின் கிடைக்கும் தன்மை; நீர் கொள்முதல்; நீர் விநியோக ஆதாரங்கள்.

**விநியோகிக்கப்படும் நீரின் தரம்: விநியோகிக்கப்படும் நீரின் நிறம், கடினத்தன்மையின் அளவு, ருசி; தண்ணீர் கிடைப்பதற்கான வழிகள்.**

**நீரின் விலை: நீர் வாங்குவதற்கான செலவீனம்.**

**ஆய்வின் மூலம், கண்டறிந்தவைகளில் முக்கியமானவை:**

1. **பெரும்பான்மையான தெருக்களில் அமைந்திருக்கும் கை பம்புகளில் அழுத்தம் இல்லாததால், நீர் கிடைப்பதில்லை.**

2. **பொது போர் பம்புகள்** (bore pumps) **வேலை செய்யாததால், நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.**

3. **விநியோகிக்கப்படும் மெட்ரோ தண்ணீரில் கழிவு நீர் கலந்து வருகிறது. குடிப்பது தவிர, இதர தேவைகளுக்கு கூட இதனை பயன்படுத்த இயலுவதில்லை.**

4. **ஒரு குடம் மெட்ரோ தண்ணீர், குறைந்த பட்சம் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது தெருவுக்கு, தெரு வித்தியாசப்படுவதும் உண்டு. இதனால் விலை கொடுத்து வாங்கும் தன்மையும், நீர் கிடைக்க பெறுவதற்கான காரணியாக அமைகிறது.**

5. **ஒழுங்கற்ற நீர் விநியோகத்தினால், நீர் தொடர்ந்து கிடைப்பது தடைபடுகிறது.**

6. **தண்ணீர் விநியோகிப்பதற்கு முன்னால் சுத்திகரிக்கப்படுவது இல்லை.**

<u>அறிமுகம்</u>

**ஒவ்வொரு குடிமக்களுக்கும் தன்னுடைய நகரத்தை அமைப்பதற்கான உரிமை உள்ளது. இந்த உரிமை பல்வேறு வகையான உரிமைகளை தன்னகத்தே கொண்டுள்ளது : பாதுகாப்பிற்கான உரிமை, ஆற்றல்,**

தண்ணீர், தூய்மை, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை அணுகுவதற்கான உரிமை என்பனவாகும். பெரும்பான்மையான மக்களுக்கு, அவர்களுடைய உரிமைகளை பற்றிய விழிப்புணர்வு இல்லாததால், அவர்கள் அதனை கோர இயலவில்லை. ஒரு நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு, தாங்கள் பாதுகாப்பாகவும், வசிக்க ஏற்றதாகவும், அந்த நகரத்தை உருவாக்கவும், மாற்றியமைக்கவும் உரிமையுள்ளது. உதாரணமாக, இந்தியாவின் நகரங்களில் குறைந்த சுகாதார வசதிகள் இருப்பதால், பாதுகாப்பான, எளிதில் அணுகக்கூடிய வகையில் அவை அமைய கிடைப்பது, தங்களுடைய உரிமை என்பதை பெண்கள் அறிவது மிகவும் முக்கியமாகும். குடிமை உரிமைகளை பற்றிய விழிப்புணர்வை பெண்களிடம் ஏற்படுத்தி, அவர்கள் வசிக்கும் நகரத்தை சொந்தம் கொண்டாடும் வகையில், இந்த 'நமது நகரம், நமது உரிமை' என்ற விழிப்புணர்வு செயலாக்கத்தை பிரக்ஞா வடிவமைத்துள்ளது.

"நமது நகரம், நமது உரிமை"யின் குறிகோள்கள்:

- குடிமை உரிமைகளை பற்றிய விழிப்புணர்வை பெண்களிடம் ஏற்படுத்தி, தங்கள் நகரங்களை சொந்தம் கொண்டாடும் வகையில் அவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது.
- தங்களுடைய குடிமை உரிமைகளை கோரும் போது, தங்கள் வட்டாரத்திற்கு தொடர்புடைய, பொருத்தமான தகவல்களை சேகரித்து, ஆவணப்படுத்தி, ஒழுங்குப்படுத்தி, அறிக்கையில் வழங்குவதற்கு இயலுமாறு தயார்ப்படுத்துவது.

பல கட்டங்களை கொண்ட 'நமது நகரம், நமது உரிமை' என்ற செயலாக்கம், பல குடிமை பிரச்சனைகளை கையாளுகிறது: பாதுகாப்பு,

தண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து, பொழுதுபோக்கு மற்றும் தேர்ந்தெடுக்கும் ஜனநாயகம்.

ரோஷ்னியின் சுய உதவி குழுவை சார்ந்த பெண்கள், 'நமது நகரம், நமது உரிமையின் இரண்டாவது கட்டத்தில், தாங்கள் கண்டறிந்தவைகளை, இந்த அறிக்கையின் மூலம் ஆவணப்படுத்துகின்றனர். இந்த கட்டத்தில், "பாதுகாப்பான நீர் விநியோகம் மற்றும் பயன்பாடு" பற்றிய கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதற்கான மதிப்பாய்வினை திருவல்லிக்கேணி மற்றும் இராயபேட்டை பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களிடம் மேற்கொண்டுள்ளனர்.

## ஆய்வுமுறை

பெண்கள், சுத்தமான, பாதுகாப்பான சுகாதார வசதிகளை அணுகுவதற்கான தங்களுடைய உரிமைகளை நிலைநிறுத்தி, உறுதிப்படுத்துவதற்காகவே இந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

'நமது நகரம், நமது உரிமை'யின் இரண்டாம் கட்டத்தின் போது, ரோஷ்னியின் சுய உதவி குழுக்களை சேர்ந்த ஐந்து பெண்கள், வீட்டுக்கு வீடு சென்று இந்த மதிப்பாய்வினை திருவல்லிக்கேணி மற்றும் இரயாபேட்டை பகுதிகளில் கீழ்க்கண்ட தெருக்களில் மேற்கொண்டனர்.

- திருவல்லிக்கேணி பகுதியை ஜலீலா, ரமணி மற்றும் விஜயலட்சுமி மதிப்பாய்வு செய்தனர்:
  மல்லன் பொன்னப்பன் தெரு, சூரப்பன் தெரு, தேவராஜ் முதலி தெரு, ஹக்கீம் மக்ஹ்தூம் அஷ்ரப் தெரு, காயிதே மில்லத் தெரு, ராமசாமி தெரு, தானப்பா தெரு, நெசவாளர் தெரு, முசப்பார் ஜங் பகதூர்

தெரு, பள்ளப்பன் தெரு, ஜானி ஜான் கான் தெரு, ஷேக் தாவூத் தெரு, T.P கோயில் தெரு, சுந்தர மூர்த்தி விநாயகர் கோயில் தெரு, செங்கல்வராயன் தெரு, தாண்டவராயன் தெரு, உலகப்பன் தெரு, சாமி பிள்ளை தெரு, நகோஜி தெரு, சிங்கோசரி தெரு, தேரடி தெரு, B,V நாயக்கன் தெரு, Dr. பெசன்ட் தெரு , Dr. நம்மாழ்வார் தெரு, இருசப்பா முதல் மற்றும் இரண்டாவது தெரு, கஜபதி முதல் மற்றும் இரண்டாவது தெரு, ராம் நகர் மெயின் ரோடு, முனுசாமி நகர், கந்தப்பன் தெரு, ராஜாஜி நகர், முருகப்பா தெரு, V.R. பிள்ளை தெரு, நரசிம்ஹா சந்து, பொன்னப்பர் தெரு, பெரியமலையப்பன் தெரு.

- இராயபேட்டை பகுதியை சந்தானலட்சுமி மற்றும் நைனம்மா மதிப்பாய்வு செய்தனர்:

  ஜவஹர் ஹுசைன் கான் தெரு, முஹம்மத் ஹுசைன் தெரு, முத்தையா முதல் மற்றும் இரண்டாம் தெரு, சைவ முத்தையா தெரு, செல்லம்மாள் தோட்டம் முதல் மற்றும் இரண்டாவது தெரு, திருநாவுகரசு தெரு, அங்கமுத்து தெரு, ஷர்புதீன் கார்டன் தெரு, அகதி முத்தன் தெரு, Dr. நியமதுல்லா தெரு, சுப்ரமணிய தோட்டம் தெரு, கபூர் முதல் மற்றும் இரண்டாவது தெரு.

## பாதுகாப்பான நீர் விநியோகம் மற்றும் பயன்பாடு குறித்த மதிப்பாய்வின் மூலம் கண்டறிந்தவை

I. நீர் விநியோகம் பற்றிய கண்ணோட்டம் :

**திருவல்லிக்கேணியிலும், ராயபேட்டையிலும், தண்ணீர் விநியோகம் ஒழுங்கற்ற முறையில், கால அட்டவணையின்றி நடைபெறுகிறது.**







**தண்ணீர் விநியோகத்திற்கான கால அட்டவணை கடைப்பிடிக்கப்படுவதை பற்றி கேள்வியெழுப்பிய பொழுது, ராயபேட்டையை** (45%) **விட திருவல்லிக்கேணியை சார்ந்த பெரும்பான்மையோர்** (55%), **இது கடைப்பிடிக்கப்படுவதாக கூறியுள்ளனர். இரண்டு பகுதிகளுக்குமான தண்ணீர் விநியோகம் பற்றிய தரவுகள் தரும் தகவல்கள், ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவையாக இருக்கின்றன. திருவல்லிக்கேணியில் ஐம்பது சதவீத பேர்கள், ஒரு நாள் விட்டு ஒருநாள் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது என்றும்;** 31% **சதவீத நபர்கள் அதில் உறுதியற்று, எப்போதாவது ஒரு நாள் விட்டு ஒரு நாள் விநியோகிக்கப்படுகிறது என்றும் கூறினர். ராயபேட்டையில், பெரும்பான்மையோர்** (49%) **தண்ணீர் விநியோகம் நடைபெறுவதில்லை என்றும்;** 29% **நபர்கள், தண்ணீர்**

விநியோகம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நடைபெறுவதாகவும் தெரிவித்து உள்ளனர்.







இரண்டு பகுதிகளையும் சார்ந்த பெரும்பான்மையானவர்கள், நேரிடையாக வீட்டிற்கே விநியோகம் செய்யப்படுகிறது என்றும் (திருவல்லிக்கேணி - 69%, ராயபேட்டை - 44%) குறிப்பிட்டுள்ளனர்; அவ்வாறு

விநியோகிக்கப்படாதவர்கள் பொது இடத்திலிருந்து தண்ணீரை பெறுகிறார்கள். இந்த வகையில், திருவல்லிக்கேணியை (14%) ஒப்பிடுகையில், அதிக நபர்கள் (38%) ராயபேட்டையில் அவ்வாறு பொது வெளியிலிருந்து தண்ணீர் பெறுகின்றனர்.







திறந்த வெளியிலிருந்து தண்ணீர் பெறப்படுபவர்களில், ஐம்பது சதவீத நபர்களுக்கும் குறைந்த பேர்களே சிறு தொலைவிலிருந்து தண்ணீர் பெறுவதாக கூறியுள்ளனர் (திருவல்லிக்கேணியில் 44% மற்றும் ராயபேட்டையில் 49%)

II. குடி நீர்:

இந்த ஆய்வில் பங்கு பெற்ற பெரும்பான்மையோர், மாநகராட்சியிலிருந்து தண்ணீர் விநியோகிக்கபடுவதில்லை என்கின்றனர். ஆய்வின் தரவுகள், இரண்டு பகுதிகளிலும் ஒரே மாதிரியான நிலை நிலவுவதாக குறிப்பிடுகிறது (70% and 74% திருவல்லிக்கேணி மற்றும் ராயபேட்டை). தண்ணீர் பருகுவதற்கு முன் சுத்திகரிக்கப்படுவது பற்றி கேள்வியெழுப்ப பட்ட போது, இரண்டு பகுதியையும் சார்ந்த பெரும்பாலானோர், அவ்வாறு செய்வதில்லை என்று கூறியுள்ளனர் (திருவல்லிக்கேணியில் 74% பேரும்,

ராயபேட்டையில் 88% நபர்களும்). நீரை பருகுவதற்கு முன் சுத்திகரிக்கும் நபர்களில், பெரும்பாலும் நீரை கொதிக்க வைத்து பருகுவதாக கூறியுள்ளனர் (31% and 27% திருவல்லிக்கேணி மற்றும் ராயபேட்டை). ராயபேட்டையில், அறுபத்தி ஒன்பது சதவிகித பேர்கள், சுத்திகரிக்கப்பட்ட குடி நீரையே விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துவதாக கூறியுள்ளனர்.







மாநகராட்சி விநியோகிக்கும் நீரை பருகாமல் இருப்பதற்கான காரணத்தை ஆராயும்போது, திருவல்லிக்கேணியில் வசிக்கும் பெரும்பான்மையானவர்கள் (65%), இந்த நீர் மாசுப்பட்டிருப்பதால், பருகுவதற்கு ஏற்றதாக இல்லை என்று கூறியுள்ளனர்; மேலும் ராயபேட்டையில் நாற்பது சதவீதம் நபர்கள் இதே கருத்தை பதிவு செய்துள்ளனர். இதில் சுவாரசியமான தகவல் என்னவென்றால், ராயபேட்டையில் பெரும்பான்மையோர் (54%), மாநகராட்சி விநியோகிக்கும் நீரை பருக முடியவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு விநியோகிக்கபடுவதில்லை.







மக்கள் விலை கொடுத்து தண்ணீர் வாங்கி பருகுவது, பாதுகாப்பான நீரை பருகுவதற்காகவே என்பது ஆய்வு திரவுகளிலிருந்து அறிய முடிகிறது (திருவல்லிக்கேணி 97%, ராயபேட்டை 100%).

III. குடிக்க அல்லாத பிற தேவைகளுக்கான நீர்

போர்வெல் நீர், மாநகராட்சி நீர், தனியார் லாரிகள் மூலமாக வாங்கப்படும் நீர், பொது குழாய்கள் மூலமாக கிடைக்கும் நீர் ஆகியவையே குடிக்க தவிர, இதர தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நீர் ஆதாரங்கள்.

குடிப்பதற்கு தவிர, குளிப்பது, துவைப்பது, சுத்தம் செய்வது போன்ற பிற தேவைகளுக்கு போதுமான தண்ணீரை மாநகராட்சி விநியோகம் செய்வதில்லை என்றே இரு பகுதிகளையும் சார்ந்த பெரும்பாலானோர் கூறியுள்ளனர் (திருவல்லிக்கேணி 94% மற்றும் ராயபேட்டையில் 83% ).

மேலும் திருவல்லிக்கேணியில், எண்பத்தி ஒரு சதவீதத்தினர் கிணற்று / போர்வெல் தண்ணீர் கிடைக்க பெறுவதாகவும், ராயபேட்டையில் அதே சதவீதத்தினர் (81%) அவ்வாறு கிடைக்க பெறவில்லை என்றும் பதிவு செய்துள்ளனர்.







குடிக்க தவிர இதர தேவைகளுக்கு, திருவல்லிக்கேணியில் (79%) பெரும்பாலானோர் போர்வெல்/ கிணற்று தண்ணீர் உபயோகிப்பதாகவும்; ராயபேட்டையில் பெரும்பாலும் தனியார் லாரியிலிருந்து தண்ணீர் வாங்குவதாகவும் (55%) ஆய்வு தரவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

IV மாநகராட்சி விநியோகிக்கும் தண்ணீரின் தரம்

திருவல்லிக்கேணியிலும் (83%), ராயபேட்டையிலும் (81%) எண்பது சதவீதத்திற்கு மேலானோர் மாநகராட்சியின் மூலம் தங்களுக்கு விநியோகிக்கப்படும் நீர், பழுப்பு நிறத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். இரு பகுதிகளிலும், நாற்பது சதவீதத்திற்கு மேலானோர், மாநகராட்சி விநியோகிக்கும் நீர் உப்பு சுவையுடன் இருப்பதாக தெரிவித்தனர் என்று ஆய்வு தரவுகள் விளக்குகின்றன (41% மற்றும் 47% திருவல்லிக்கேணி மற்றும் ராயபேட்டை).






V சமூகமாக கூடி நீர் கிடைக்க பெறுதல்

இரு பகுதிகளிலும், பெரும்பாலானோர் தாங்கள் தனியாக தண்ணீர் கொணர செல்வதில்லை என்று கூறியிள்ளனர். அவ்வாறு போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் கூட, தொலை தூரம் செல்ல வேண்டிய அவசியமில்லை என்பதே அவர்களின் கருத்து. பெண்கள் குழுக்காளாக தண்ணீர் கொணர செல்வது இயல்பாக அமைந்துள்ளதாக தரவுகளை ஆழமாக ஆராயும் போது, நம்மால் அறிய முடிகிறது. இது, சமூகமாய் ஒன்றிணைந்து வாழும் உடன்பாடான போக்கினை குறிக்கிறது.







VI நீர் விநியோகத்திற்கான விலை

இரு பகுதிகளிலும் எழுபது சதவீதத்திற்கு மேலானோர், குடிப்பதற்கோ அல்லது பிற தேவைகளுக்கோ தண்ணீரை வாங்கவே செய்வதாக ஆய்விலிருந்து தெரிகின்றது. பெரும்பாலும் அவர்கள் ஒரு மாதத்திற்கு ரூபாய் 600-800 வரை செலவு செய்கின்றனர்.







## பரிந்துரைகள்

- பொதுவாக அமைந்துள்ள கை பம்புகள் பழுது அடைந்த நிலையில் உள்ளது. அதனை பழுது செய்யும் பட்சத்தில், மக்கள் பயன் பெறுவர்.
- பெரும்பாலும் மாநகராட்சி விநியோக்கும் நீர், கழிவு நீருடன் கலந்து காணப்படுகிறது. பல முறை, நீர் கருப்பு நிறத்தில் காணப்படுவதும் உண்டு.
- மாசுப்படிந்த நீரினை கொண்டு, துணிகளை துவைப்பதும் இயலாமல் போகிறது. ஆனால் அதனை பயன்படுத்த கூடிய தேவையின் போது, டெட்டால் போன்ற கிருமி கொல்லிகளை பயன்படுத்தி துணிகள் துவைக்கின்றனர். மாநகராட்சி நீரை விநியோகிக்கும் முன்னர், கவனமாக சுத்திகரிப்பு செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- குறித்த நேரமல்லாமல் நீரை விநியோகிப்பது, தண்ணீர் பற்றாக்குறையை மேலும் தீவிரப்படுத்தும் விதமாக அமைகிறது. இது மிக பெரிய பிரச்சனையாகவும் உருவெடுக்கிறது. தொடர்ந்த, குறித்த நேரத்தில் நீர் விநியோகிக்கப்படும் பட்சத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஓரளவு குறைய கூடிய வாய்ப்புகள் உள்ளன.
- ஒரு குடம் மெட்ரோ தண்ணீர், குறைந்த பட்சம் ஐந்து ரூபாய் என்று விற்கப்படுகிறது. அனைவராலும் தங்களுக்கு போதுமான நீரை விலை கொடுத்து வாங்க முடிவதில்லை. இதனால் அவர்களின்

உரிமையான தண்ணீர் கிடைக்க பெறுதல் மறுக்கப்படுகிறது. பணம் எதிர்ப்பார்க்காமல் மெட்ரோ நீர் விநியோகிக்கப்படும் பட்சத்தில், அனைவரும் சமமாய் தண்ணீர் பெற இயலும்.

- தெருவில் அமைந்துள்ள கை பம்புகள் சரி வர வேலை செய்தாலும், தண்ணீரை நிலத்தடியிலிருந்து வெளி கொணர போதுமான அழுத்தம் கிடைப்பதில்லை. இதனை சரி செய்வதும் கூட, தண்ணீர் பிரச்சனையை தீர்ப்பதற்கான ஒரு வழியாக அமையும்.

**இணைப்பு I : பாதுகாப்பான நீர் விநியோகம் மற்றும் பயன்பாடு பற்றிய மதிப்பாய்வு படிவம்**

பெயர்:

முகவரி :

தொலைபேசி எண் :

I. கண்ணோட்டம்

1. உங்களது குடியிருப்பு பகுதியில் தண்ணீர் விநியோகம் எவ்வாறு உள்ளது?

a) ஏராளமாக b) வழக்கமாக c) ஒழுங்கற்று d) அரிதாய்

2. மாநகராட்சி தண்ணீர் விநியோகத்திற்கு குறிப்பிட்ட நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

a) ஆமாம் b) இல்லை c) எனக்கு தெரியவில்லை

2.1.. ஆமாம் என்றால், கால நிர்ணயம் என்ன என்பதை விளக்குங்கள்.

3. தண்ணீர் எங்கே விநியோகிக்கப்படுகிறது?

a) **நேரடியாக உங்களுடைய வீட்டிற்கு**
b) **உங்களுடைய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பொது இடத்தில்.**
c) **வேறு வெளியிடங்களில்**
d) **வேறு ஏதாவது எனில், குறிப்பிடுக ______________________________**

**5. நீங்கள் தண்ணீர் எடுப்பதற்கு செல்ல வேண்டுமென்றால், எவ்வளவு தொலைவு செல்வீர்கள்?**

**II. குடி நீர்**

1. **மாநகராட்சி விநியோகிக்கும் நீரை பருகுறீர்களா?**

a) **ஆமாம்** b) **இல்லை**

**2. நீங்கள் நீரை பருகுவதற்கு முன் சுத்திகரிப்பு செய்வீர்களா?**

a) **ஆமாம்** b) **இல்லை**

**2.1.. ஆமாம் என்றால், எவ்வாறு?**

a) **கொதிக்க வைத்து**
b) **கைகளால் வடிகட்டி**
c) **மின் வடிகட்டி**
d) **வேறு ஏதாவது எனில், குறிப்பிடுக ______________________________**

**2.2. இல்லையெனில், நீங்கள் ஏன் மாநகராட்சி விநியோகிக்கும் நீரை பருகுவதில்லை?**

3. குடிநீர் எவ்வாறு உங்களுக்கு கிடைக்கிறது?

a) வாட்டர் கேன் வாங்குவது மூலமாக
b) வேறு ஏதாவது எனில், குறிப்பிடுக ______________________________

III. புழங்குவதற்கு தண்ணீர்

1. புழங்குவதற்கு (கழுவுவதற்கு) மாநகராட்சி விநியோகிக்கும் தண்ணீர் தகுந்ததாக இருக்கிறதா ?

a) ஆமாம் b) இல்லை

2. உங்களது அனைத்து தேவைகளுக்கும் போதுமானதாக இருக்கிறதா (குளியல் ,
கழிவறை, சுத்தம் செய்தல்)?

a) ஆமாம் b) இல்லை

3. போர்வெல் அல்லது கிணற்று தண்ணீர் உங்களுக்கு கிடைக்கிறதா?

a) ஆமாம் b) இல்லை

4. மாநகராட்சி விநியோகிக்கும் தண்ணீர் தவிர, நீங்கள் வேறு வகையில் தண்ணீர்
வாங்குகிறீர்களா?

a) ஆமாம் b) இல்லை

5. குடிப்பதற்கு அல்லாமல் புழங்குவதற்கு (கழுவுவதற்கு) நீங்கள் வேறு ஏதாவது நீர்
ஆதாரங்களை உபயோகிக்கிறீர்களா?

6. ஒவ்வொரு நீர் ஆதாரத்தின் மூலம் எவ்வளவு சதவிகிதம் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது என்று கூறுங்கள்.

a) மாநகராட்சி
b) போர்வெல்/ கிணறு
c) தனியார் நீர் தொட்டி
d) மற்றவை

IV. நீர் விநியோகத்தின் தரம்

1. மாநகராட்சி உங்களுக்கு விநியோகிக்கும் தண்ணீர் எவ்வாறு காணப்படுகிறது?

a. நிறம்: பழுப்பு / தெளிந்து
b. கடினத்தன்மை : சோப்பு உபயோகிக்கும் போது நன்றாக நுரை வருகிறதா?
c. சுவை : உப்பு/ தட்டையான/ இனிப்பு/சிறந்த

2. நீங்கள் வெளியிடங்களுக்கு தண்ணீர் எடுக்க செல்வீர்கள் என்றால், உங்களால் தனியாக துணை இல்லாமல் இயலுமா?

a) ஆமாம் b) இல்லை

2.1.. நீங்கள் தனியாக தண்ணீர் எடுக்க செல்ல இயலாது என்றால், எவ்வாறு அதனை கையாளுகிறீர்கள்?

a) ஆண் உறவினர் எனக்காக தண்ணீர் கொணர்வார்.
b) தண்ணீர் கொணர்வதற்காக சம்பளம் கொடுத்து வேலையாள் நியமித்துள்ளேன்.
c) பெண்கள் ஒன்று கூடி தண்ணீர் எடுக்க செல்வோம்.
d) வேறு ஏதாவது எனில், குறிப்பிடுக ______________________________

V. நீர் விநியோகத்திற்கான விலை

1. நீங்கள் விலை கொடுத்து தண்ணீர் உங்கள் வீட்டு உபயோகத்திற்கு வாங்குகிறீர்களா?

a) ஆமாம் b) இல்லை

1.1. ஆம் என்றால், ஒரு மாதத்திற்கு எவ்வளவு பணம் தண்ணீருக்காக செல்வழிக்கிறீர்கள்?